**விரைவு நீதிமன்றம், காரைக்குடி**

**முன்னிலை : செல்வி. செ. ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)**

**நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி.**

**2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்.2876/2024**

**இன்**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் :126/2023**

ராமசாமி ......மனுதாரர்/புகார்தாரர்

/எதிர்/

1.பிரமானந்தன்

2.முத்துலெட்சுமி .......எதிர்மனுதாரர்/எதிரிகள்

இம்மனுவானது, கடந்த 03.12.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இன்று 24.12.2024-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஜெ.மார்க்கண்டேயன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.கணேஷ்பாபு அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சாட்சிகளான 1.சுரேஷ்,த/பெ.முருகேசன், 2.ஜெயக்குமார், த/பெ.ஆண்டாழியார் ஆகியோரை சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**1. மனுச்சுருக்கம்**

மேற்படி வழக்கில் மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/எதிரிகளுக்கு காசோலையில் கண்ட தொகையினை கொடுத்த மனுதாரர் குற்ற முறையிட்டாளருக்கு காசோலையில் கண்ட தொகையினை கொடுத்த நபர்களை விசாரிக்க வேண்டி உள்ளது.

இதனடிப்படையில் சாட்சிகளான 1.சுரேஷ்,த/பெ.முருகேசன், 2.ஜெயக்குமார், த/பெ.ஆண்டாழியார் ஆகியோர்களை சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே வழக்கின் உண்மை தெரியவரும். இம்மனுவினை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கஷ்ட, நஷ்டம் ஏற்படும். இம்மனுவினை ஏற்றுக்கொண்டு மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. மனுதாரர்/புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.எதிருரை**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாப்படியும் நிலை நிற்கக்கூடியதல்ல. மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகார் மனுவிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடாத புதிய சங்கதியை கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது எவ்வகையிலும் ஏற்கக்கூடியதல்ல. இம்மனுவும் Fill Up the Lacuna மற்றும் Introducing of new case என்ற அடிப்படையில் தள்ளுபடிக்கு உரியது. இம்மனுவில் கண்ட சாட்சிகள் பற்றி இதுவரை எங்குமே குறிப்பிடவில்லை. புகார் சாட்சி பட்டியலும் அவர்கள் பெயர் இடம்பெறவில்லை. இம்மனுவிலும் சாட்சிகள் ஒவ்வொருவரும் எதற்காக விசாரிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டு கூறவில்லை. காசோலையில் கண்ட தொகையினை கொடுத்த நபர்களை விசாரிக்க வேண்டி உள்ளது என்று மட்டும் கூறுவது போதுமான காரணமல்ல. மேலும் இந்த மனு அனுமதிக்கப்பட்டால் எதிரிகளுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். மனுதாரர் வழக்கு விசாரணையை காலம் கடத்தும் நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவை மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா அல்லது இல்லையா?

**4. பிரச்சனைக்குரிய தீர்வு**

1)இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா என்பது குறித்து பார்க்கும்போது மூலவழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு எதிரி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/எதிரிகளுக்கு காசோலையில் கண்ட தொகையினை கொடுத்த நபர்களான 1.சுரேஷ்,த/பெ.முருகேசன், 2.ஜெயக்குமார், த/பெ.ஆண்டாழியார் ஆகியோரை சாட்சியாக விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நபர்களை விசாரிப்பதில் புகார்தாரர் அவரது வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்பதாலும், தரப்பினருக்கு உரிய வாய்ப்புகள் அளிக்க வேண்டிய இயற்கை நியதியின் அடிப்படையில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்திருக்கும் மனுவானது அனுமதித்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு மார்ச் 18-ம் நாள் செவ்வாய்க்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.